**9.4.2015**

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நெல்லை மாவட்டத்தில் திடீர் மழை

திருநெல்வேலி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் புதன்கிழமை திடீரென மழை பெய்தது. இதனால், வெப்பம் வெகுவாகத் தணிந்தது. கோடை காலம் தொடங்கிய நிலையில் திருநெல்வேலியில் 100 டிகிரி ஃபாரன்ஹீட்டை தாண்டி வெப்பம் நிலவி வருகிறது. இந்த நிலையில், மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் புதன்கிழமை மழை பெய்தது. திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம், முன்னீர்பள்ளம் பகுதிகளில் அரை மணி நேரம் மழை நீடித்தது. இதனால், சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, சேரன்மகாதேவி, கூடங்குளம், இடிந்தகரை பகுதிகளில் மிதமான மழை பெய்தது. கோடை வெயிலின் தாக்கம் குறைந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். அடவிநயினார் அணையில் 5 மி.மீ, ஆய்க்குடியில் 5.2 மி.மீ மழை பதிவாகியிருந்தது. மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மிதமான மழை பெய்ததாக அணை வட்டாரங்கள் தெரிவித்தன. நீர்மட்டம்: புதன்கிழமை காலை நிலவரப்படி நீர்மட்ட நிலவரம்: பாபநாசம் அணை- 75.20 அடி, சேர்வலாறு அணை- 87.60 அடி, மணிமுத்தாறு அணை -85.77 அடி, கடனாநதி அணை- 27.80 அடி, ராமநதி அணை- 25 அடி, கருப்பாநதி அணை- 24.77 அடி, அடவிநயினார் அணை- 10.75 அடி, வடக்குப் பச்சையாறு அணை- 31 அடி, நம்பியாறு அணை- 13.09 அடி, கொடுமுடியாறு அணை- 2.50 அடி. பாபநாசம் அணையில் இருந்து 204.75 கனஅடியும், வடக்குப் பச்சையாறு அணையில் இருந்து 70 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

"ரோஜா சாகுபடியில் கைமேல் பலன்'



உரிய ஆலோசனைகளுடன் நேர்த்தியான முறையில் எட்வர்ட் ரோஜா, ஆந்திர சிவப்பு ரோஜா ஆகியவற்றை சாகுபடி செய்தால் விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும் என மாவட்ட தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். எட்வர்ட் ரோஜா, ஆந்திர சிவப்பு ரோஜா சாகுபடிக்கு உரிய வழிமுறைகள் குறித்து அவர்கள் கூறியதாவது: ரோஜா சாகுபடிக்கு நல்ல வடிகால் வசதியுள்ள குறுமண் நிலம் சிறந்ததாகும்.

**நடவு முறை:** 45 செ.மீ. ல 45 செ.மீ. ல 45 செ.மீ. என்ற அளவுள்ள குழிகளை 2 மீட்டருக்கு ஒரு மீட்டர் இடைவெளியில் தயாரிக்க வேண்டும். குழிக்கு 10 கிலோ சாண எரு, 20 கிராம் லின்டேன் ஆகியவற்றை கலந்து இடவேண்டும். நீர்ப் பாசனம்: செடிகள் வேர் பிடிக்கும் வரை 2 நாள்களுக்கு ஒரு முறையும், அதன் பின் வாரம் ஒரு முறையும் முழுமையாக நீர்ப் பாய்ச்ச வேண்டும். கவாத்து செய்தல்: அந்தந்த பருவத்துக்கேற்ப முன் பருவக் கிளைகளை பாதி அளவில் இருக்குமாறு வெட்டி விட வேண்டும். அனைத்து நலிவுற்ற நோய்த் தாக்கப்பட்ட, குறுக்கு நெடுக்காக வளர்ந்துள்ள பலன் தராத கிளைகளை அகற்றி, வெட்டிய முனைகளில் பைட்டலான் கலவையுடன் கார்பரில் நனையும் தூள் கொண்டு தடவ வேண்டும். **உரமிடுதல்:** (செடி ஒன்றுக்கு) சாண எரு 10 கிலோ, 6:12:12 கிராம் அளவில் தழை, மணி, சாம்பல் சத்து கொண்ட உரத்தை கவாத்து செய்து அந்தந்த பருவத்துக்கேற்ப இடவேண்டும்.

**பயிர் பாதுகாப்பு:** செடியில் வண்டுகள் வந்தால், எண்டோசல்பான் 35-ஐ, 2 மில்லி லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். ஒளி விளக்குகள் வைத்து இந்த வண்டுகளை கவர்ந்து பின் அழிக்கலாம்.

**சிவப்பு செதில் பூச்சிகள்:** பூச்சி தாக்கிய கிளைகளை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும். மீன் எண்ணெய், சோப்பு 25 கிராம் அளவை ஒரு நீரில் கரைத்து தெளிக்க வேண்டும்.

**சாறு உறிஞ்சும் பூச்சிகள்:** (அசுவினி இலைப் பேன்கள், தத்துப் பூச்சிகள்) வேப்ப எண்ணெய் 3 சதவீதம் அல்லது கார்போப்யூரான் 3ஜி, குருணை ஆகியவற்றை செடிக்கு 5 கிராம் இடவேண்டும்.

**சாம்பல் நோய்:** நனையும் கந்தகம் 2 கிராம் அல்லது கார்பென்டெசிம் 1 கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இந்த முறையில் சாகுபடி செய்தால் நடவு செய்த முதல் வருடம் பூக்கத் தொடங்கி விடும். ஒரு ஹெக்டேருக்கு, ஒரு ஆண்டுக்கு 10 லட்சம் பூக்கள் கிடைக்கும். மேலும், சந்தேகங்கள் இருந்தால் தோட்டக்கலை துறை கள அலுவலரிடமோ அல்லது தோட்டக் கலைத் துறை அலுவலகத்திலோ கேட்டு தெரிந்து கொள்ளலாம் என தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலக அதிகாரிகள் கூறினர்.

## விவசாயிகள் கவனத்துக்கு.. சித்திரைப் பட்டத்தில் மிளகாய் விதைப்பு



சித்திரைப் பட்டத்தில் மிளகாய் விதைக்கும் விவசாயிகள் விதை பரிசோதனை செய்த பின்னர் விதைப்பதால் அதிக மகசூல் பெறலாம்.

இதுகுறித்து காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் பெருமாள் கூறியதாவது: சித்திரைப் பட்டத்தில் காய்கறி சாகுபடிக்கு விவசாயிகள்

தயாராகி வருகின்றனர். அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும் வீரிய ஒட்டுரக காய்கறி விதைகளை தரமானதாக உள்ளதா, நல்ல முளைப்புத் திறன் உள்ளதா என விவசாயிகள் பார்த்து வாங்க வேண்டும். குறிப்பாக, மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகள் 100 சதவீதம் முளைப்புத் திறன் உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். வீரிய ஒட்டுரக மிளகாய் பயிரை 2.5 அடி இடைவெளிவிட்டு நடவு செய்தால் ஏக்கருக்கு 8,890 செடிகள் வரை பராமரிக்கலாம். இப்படி செய்தால் 20 சதவீதம் கூடுதல் மகசூல் பெறலாம். விவசாயிகள் தங்களது விதைகளை 10 கிராம் மாதிரி எடுத்து விதை பரிசோதனை நிலையங்களில் ரூ.30 செலுத்தி பரிசோதனை செய்யலாம். பாரம்பரிய மிளகாய் சாகுபடியை மேற்கொள்ள சில அறிவுரைகள்: மிளகாய் விதையை சாண எரிவாயு கலன் கழிவில் ஒன்றரை மணி நேரம் ஊறவைத்து விதைத்தல் விதை வீரியமாக முளைத்து நன்கு வளர்வதோடு நோய் எதிர்ப்பு சக்தி உண்டாக்குகிறது. ஆட்டுக்கிடை அமர்த்தினால் அதிக மகசூல் கிடைக்கும். கடலை புண்ணாக்கு இடுவதால், பூ உதிர்வது தடுக்கப்படுவதோடு மகசூல் அதிகரிக்கும். அதிக பூக்கள் பெறவும், பூ உதிர்வதைக் குறைப்பதற்கு, பெருங்காயத்தை ஏக்கருக்கு 1 கிலோ வீதம் எடுத்து, துணியில் கட்டி வாய்க்காலில் வைக்க வேண்டும். ஆமணக்குப் பயிரை வரப்புப் பயிராக பயிர்ச் செய்தால் அது புகையிலை வெட்டுப்புழுவை கவரும். 5 மிளகாய் வரிசைக்கு 2 வரிசை மக்காச்சோளம் அல்லது சோளம் நடவு செய்தால் தேமல் நோயைக் கட்டுப்படுத்தலாம். முள்செடி இலைச்சாற்றை 2 மாதம் ஆன செடியில் தெளித்தால், இலைப்புள்ளி, சாம்பல் நோய் அழுகலைக் கட்டுப்படுத்தலாம். வேம்பு, அரளி, நொச்சி, துளசி, எருக்களை ஆகியவற்றின் இலைகளை இடித்து அதை வடிகட்டி அந்தச் சாற்றை தெளிக்கலாம். இதனால் இலைச்சுருள் நோய், வெள்ளை ஈ தாக்குதல் கட்டுப்படுத்துவதோடு, நன்றாகச் செடி வளரும். வில்வம் இலைச்சாற்றை தெளிப்பதால் அடி அழுகல் நோய் கட்டுப்படுத்தலாம் என்றார்.

## கால்நடை வளர்ப்போருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி

வேளாண் துறை சார்பில் கால்நடை வளர்ப்போருக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை சஞ்சீவி நகர் கிராமத்தில் நடைபெற்றது. ஆத்மா திட்டத்தின் மூலம் பலதரப்பு விவசாயிகளை குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்களுக்கு பயிற்சிகள், நிருபனவயல் அமைத்தல் மற்றும் கல்விச் சுற்றுலா போன்ற செயல்பாடு களை செயல்படுத்திக் கொண்டு வருகிறது. காலாப்பட்டு பண்ணை தகவல் மற்றும் விவசாயிகள் ஆலோசனை மையத்தின் சார்பில் சஞ்சீவி நகர் கிராமத்தில் கால்நடை வளர்ப்போர் விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் அலுவலர் டி.அனுப்குமார் வரவேற்றார். துணை வேளாண் இயக்குநர் மற்றும் எஸ்.சந்தனானக் கிருஷ்ணன் தலைமை தாங்கி, குழுக்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்றும் அதன் நன்மைகள் பற்றியும் கூறினார். பின்னர் கால்நடை வளர்ப்போர் விவசாய குழுக்களுக்கு சுழல்நிதி காசோலையையும் வழங்கினார். இதன் ஒரு பகுதியாக கால்நடை விவசாயிகளுக்கு கால்நடை மருத்துவர் அனிதா கால்நடை வளர்ப்பை பற்றி விளக்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சாந்தி பேசினார். இதில் சஞ்சீவி நகர் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 25 பேர் பயிற்சி பெற்றனர். இதற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் நாராயணசாமி, கிராம விரிவாக்க பணியாளர் பழனி மற்றும் விவசாயி சுப்பிரமணி ஆகியோர் செய்திருந்தனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஏ.ஆதித்தன் நன்றி கூறினார்.

## மஞ்சள் விலை உயருமா? எதிர்பார்ப்பில் விவசாயிகள்



கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் மஞ்சள் விளைச்சல் 50 சதவீதம் குறைந்துள்ளது. இதனால் மஞ்சள் விலை உயருமா? என விவசாயிகள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர். ஆந்திர மாநிலம், நிஜாமாபாத், கர்நாடக மாநிலம், சாங்கிலி, தமிழகத்தில் ஈரோடு என இந்தியாவில் 3 இடங்களில்தான் தேசிய அளவில் தரமான மஞ்சள் சந்தை உள்ளது. ஈரோடு, சுண்ணாம்பு ஓடைப் பகுதியில் அரசு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும், நசியனூர் சாலையில் உள்ள செம்பாம் பாளையம் தனியார் மஞ்சள் சந்தையிலும், ஈரோடு, மணிக்கூண்டு அருகே, கோபி கூட்டுறவு வேளாண் விற்பனைச் சங்கத்திலும், கருங்கல்பாளையத்தில் உள்ள ஈரோடு கூட்டுறவு வேளாண் விற்பனைச் சங்கத்திலும் திங்கள் முதல் வெள்ளி வரை மஞ்சள் ஏலம் நடைபெறுகிறது. ஈரோடு, திருப்பூர், கரூர், நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை, திருச்சி, மதுரை, தேனி, திண்டுக்கல் உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து தினமும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் ஈரோடு மஞ்சள் சந்தையில் தங்களது மஞ்சளை விற்பனை செய்து வருகின்றனர். தமிழகம் மட்டுமின்றி கர்நாடகம், கேரளம், ஆந்திரம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட பிற மாநிலங்களில் இருந்து வரும் வியாபாரிகள் ஏலத்திற்கு வைக்கப்படும் மஞ்சள் மாதிரிகளைப் பார்த்து, அவற்றின் தரத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்கின்றனர். கட்டுபடி யான விலை கிடைத்தால் விவசாயிகள் தங்களது மஞ்சளை விற்பனை செய்கின்றனர். இல்லையெனில், மஞ்சள் மூட்டைகளைக் கிடங்குகளில் இருப்பு வைத்து தகுந்த விலை கிடைக்கும் போதுதான் விற்பனை

செய்கின்றனர். கடந்த டிசம்பருக்கு முன் 6 மாதங்களாக மஞ்சள் விலை நிலையாக இல்லை. குறிப்பாக ஒரு குவிண்டால் மஞ்சள் அதிகபட்சமாக ரூ. 5,500 முதல் ரூ. 6,500 வரை தான் விலை போனது. ஆனால், டிசம்பர் இறுதியில் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக ரூ. 10,000-க்கு விற்பனை யானது. இந்நிலையில், டிசம்பர் தொடக்கத்தில் இருந்தே மஞ்சள் விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் இருந்து வருகிறது. ஜனவரி முதல் வாரத்தில் ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ. 9,000 வரை விலை போனதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தொடர்ந்து மஞ்சள் விலை பெரிய அளவில் சரியவில்லை. தற்போது மஞ்சள் விலை ரூ. 8,000 முதல் ரூ. 9,000 வரை உள்ளது. 2013-14-ஆம் ஆண்டுடன் 2014-15-ஆம் ஆண்டை ஒப்பிடும்போது, மஞ்சள் விளைச்சல் 50 சதவீதம் குறைந்துள்ளது. எனவே, இந்த ஆண்டு மஞ்சள் விலை உயரும் என்ற எதிர்பார்ப்புடன் விவசாயிகள் காத்திருக்கின்றனர். இதுகுறித்து, இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கத் தலைவர் பி.கே.தெய்வசிகாமணி கூறியது: இந்தியாவில் ஆந்திரம், தமிழகம், மகாராஷ்டிரம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் அதிகளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நாட்டில் சாகுபடி செய்யும் மொத்த பரப்பில் 41 சதவீதம் ஆந்திரத்திலும், 21 சதவீதம் தமிழகத்திலும், 7 சதவீதம் கர்நாடகம் மற்றும் மகாராஷ்டிரத் திலும் உள்ளது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் 15 லட்சம் ஏக்கர் மஞ்சள் பயிரிடப்பட்டது. 2013-14-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாக 2 லட்சம் ஏக்கர் சாகுபடி பரப்பு குறைந்தது. தொடர்ந்து, 2014-15-ஆம் ஆண்டில் மேலும் ஒரு லட்சம் ஏக்கர் சாகுபடி பரப்பு குறைந்துவிட்டது. சோயா, கம்பு பயிர்களுக்கு நல்ல விலை கிடைப்பதால், ஆந்திர மாநிலத்தில் மஞ்சள் பயிரிட்டு வந்த விவசாயிகளில் 10 சதவீதம் பேர் அந்தப் பயிர்களுக்கு மாறிவிட்டனர். மகாராஷ்டிரம், தமிழகத்தில் வறட்சியால் மஞ்சள் சாகுபடி பரப்பு குறைந்துவிட்டது. இந்தியாவிலேயே அதிகமாக மஞ்சள் விளையும் தெலங்கானா பகுதியில் மின்சாரம்

தட்டுப்பாடு காரணமாக பாசன நீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அங்கும் கடந்த ஆண்டைவிட விளைச்சல் குறைந்துவிட்டது. தமிழகத்தில் 2 ஆண்டுகளுக்கு முன் 3 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டு வந்த மஞ்சள் பயிர் இப்போது 50 ஆயிரம் ஏக்கராக குறைந்துவிட்டது. ஈரோடு மாவட்டத்தில் 1 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டு வந்த மஞ்சள் இப்போது 15 ஆயிரம் ஏக்கராக குறைந்துவிட்டது. வறட்சி காரணமாக மஞ்சள் பயிரிடுவதை விவசாயிகள் நிறுத்தி வருவதால் தொடர்ந்து மஞ்சள் சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது. இதனால், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, தற்போது 50 சதவீதம் மஞ்சள் வரத்து குறைந்துவிட்டது. ஓராண்டுக்கு முன், ஒரு ஏக்கரில் 20 குவிண்டால் மஞ்சள் விளைந்த நிலையில், இப்போது 10 முதல் 15 குவிண்டால் தான் விளைந்துள்ளது. விளைச்சல் குறைவுக்கு மஞ்சளின் விளைதிறன் குறைவும் ஒரு காரணமாக அமைந்துவிட்டது. மஞ்சள் விளைச்சல் குறைவு, விற்பனைக்கு வரத்து குறைவு காரணமாக இம்மாத இறுதியில் அல்லது மே மாதத்தில் மஞ்சள் விலை ரூ. 10,000 முதல் ரூ. 12,000 வரை உயரும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

## <u>பி.ஏ.பி., திட்டத்தில் நுண்ணீர் பாசனமுறை : ரூ.400 கோடி திட்ட மதிப்பீடு</u>

பி.ஏ.பி. திட்டத்தில் தண்ணீர் விரயத்தைத் தடுக்கும் வகையில் நுண்ணீர் பாசன முறையை செயல்படுத்த ரூ. 400 கோடி திட்ட மதிப்பீடு தயாரித்து அரசுக்கு கருத்துரு அனுப்ப, பொள்ளாச்சியில் நடைபெற்ற விவசாயிகள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் புதன்கிழமை முடிவு செய்யப்பட்டது.

பி.ஏ.பி., திட்டத்தில், திருமூர்த்தி அணையில் இருந்து மொத்தம் 3 லட்சத்து 77 ஆயிரத்து 162 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இதில், நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, விவசாயப் பகுதிகளுக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் சுமார் 95 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. விளைநிலங்கள்

பரப்பு அதிகமாக இருப்பதால் தண்ணீர் வழங்குவதில் சிக்கல் நிலவுகிறது. விளைநிலங்களுக்கு ஒரு ஆண்டு விட்டு அடுத்த ஆண்டில்தான் தண்ணீர் வழங்க முடிகிறது. இதனால், விவசாயிகள் வறட்சியில் சிக்கித்தவித்து வருகின்றனர். இதைக் கருத்தில் கொண்டு, நுண்ணீர் பாசன முறையை செயல்படுத்த பொதுப்பணித் துறை அதிகாரிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். நுண்ணீர் பாசன முறையை அமல்படுத்துவது சம்பந்தமாக, விவசாயிகளுடனான கலந்தாய்வுக் கூட்டம் பொள்ளாச்சி சார்-ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதற்கு, ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் கிறிஸ்துராஜ், சார்-ஆட்சியர் ரஷ்மி சித்தார் ஜகடே, பொதுப்பணித் துறை அதிகாரிகள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக அதிகாரிகள், விவசாயிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முதல்கட்டமாக, உடுமலை பகுதியில் அணிக்கடவு முதல் பெரியகுமாரபாளையம் பகுதி வரை உள்ள கால்வாயில் 15 கி.மீ. தொலைவிற்கு 4,000 ஏக்கர் நிலங்கள் தேர்வு செய்து, அந்த பகுதிகளில் மட்டும் முன்மாதிரியாக கால்வாய்களில் இருந்து நுண்ணீர் பாசன முறையை செயல்படுத்துவது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பபட்டது. பி.ஏ.பி. திட்டத்தில் நுண்ணீர் பாசனம் அமைக்க ரூ. 400 கோடி மதிப்பில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளது. இதில், ரூ. 200 கோடி மத்திய அரசிடமும், ரூ. 160 கோடி உலக வங்கியிடம் இருந்தும் பெறுவது, விவசாயிகள் பங்களிப்பு ரூ. 40 கோடி எனவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான கருத்துருவை தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பி.ஏ.பி., திட்டக் குழு புறக்கணிப்பு: பி.ஏ.பி.,திட்டம் சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் நடத்தினாலும், புதிய திட்டங்கள் செயல்படுத்தி னாலும் பி.ஏ.பி., திட்டக் குழுவின் ஆலோசனையை அதிகாரிகள் இதுவரை கேட்டுவந்தனர். பி.ஏ.பி., திட்டக் குழுவில் தலைவர், 9 பகிர்மானக் குழுத் தலைவர்கள், 134 கிளைத் தலைவர்கள் உள்ளனர்.

ஆனால், புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகள் ஆலோசனைக் கூட்டத்திற்கு திட்டக் குழுத் தலைவர்கள் அழைக்கப்படவில்லை. இதனால், திட்டக் குழுவினர் அதிருப்தி அடைந்துள்ளனர். இதுகுறித்து பி.ஏ.பி., திட்டக் குழுத் தலைவர் மெடிக்கல் பரமசிவம் கூறுகையில், புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகள் கலந்தாய்வுக் கூட்டம் குறித்து திட்டக் குழுவினருக்கு தகவல் தெரிவிக்கவில்லை. வழக்கமாக திட்டக் குழுவை கலந்தாலோசித்தே புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றார்.

## <u>பயிர்ப் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பயிற்சி</u>

மேற்கு ஆரணி ஒன்றியம், குஞ்சாந்தாங்கல் கிராமத்தில் பயிர்ப் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பயிற்சி செவ்வாய்க்கிழமை அளிக்கப்பட்டது. மேற்கு ஆரணி வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில், தேசிய எண்ணெய் வித்துப் பயிர்கள் இயக்கம் மூலம் குஞ்சாந்தாங்கல் கிராமத்தில் மணிலா, எள் உள்ளிட்ட எண்ணெய் வித்துப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. இதில் மேற்கு ஆரணி வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி கலந்துகொண்டு,மணிலா, எள் பயிர்களில் பருவத்துக்கேற்ற நவீன ரகங்களைப் பயன்படுத்துதல், உயிர் உர விதை நேர்த்தி செய்யும் தொழில்நுட்பங்கள் குறித்துப் பேசினார். மேலும் பயிர் பாதுகாப்பில் பூச்சி மருந்துகளை மட்டும் பயன்படுத்தாமல் உழவியல் முறைகள், கோடை உழவு செய்தல், இயந்திரவியல் பயிரைத் தாக்கும் புழு, பூச்சிகளின் முட்டைகளையும் கண்டறிந்து அழித்தல், விளக்குப் பொறி பயன்படுத்தி தாய் அந்துப் பூச்சிகளை அழித்தல், உயிரியல் முறைகளான ஊடுபயிராக ஆமணக்கு பயிர் செய்தல், வேப்பெண்ணெய் பயன்படுத்துதல், ஒட்டுண்ணிகள், நன்மை செய்யும் பூச்சிகளைப் பயன்படுத்துதல் போன்ற முறைகளை பயிரின் பருவத்துக்கேற்ப ஒன்றிணைந்து பின்பற்றுவதால் சாகுபடி செலவைக் குறைப்பது மட்டுமின்றி அதிக லாபமும் பெறலாம் என்றார். இதில் வேளாண்மை

அலுவலர் கீதா, துணை வேளாண்மை அலுவலர் எம்.வேலு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**<u>சிவகங்கை மாவட்டத்தில் மழை</u>**

சிவகங்கை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் புதன்கிழமை பெய்த திடீர் மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 2 வாரங்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. இதன் காரணமாக பொதுமக்கள் பகலில் வெளியே தலை காட்ட தயக்கம் காட்டினர். இந்நிலையில் புதன்கிழமை காலை முதலே காரைக்குடி, திருப்பத்தூர், தேவகோட்டை மற்றும் காளையார்கோவிலை சுற்றியுள்ள புலியடிதம்மம் உள்ளிட்ட பகுதிகளில் ஓரளவு நல்ல மழை பெய்தது. சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சாரல் மழை பெய்தது. கடும் வெயில் தொடங்கியுள்ள இந்த நேரத்தில் பகலில் மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். காரைக்குடி: காரைக்குடியில் புதன்கிழமை மிதமான மழை பெய்தது. கடந்த சில தினங்களாக வெப்பநிலை உயர்ந்து கொண்டே வந்த நிலையில், காரைக்குடி நகர் பகுதியில் காலை 10 மணியளவில் மேகமூட்டம் காணப்பட்டது. பின்னர் காலை 11 மணிக்கு மழை பெய்யத் தொடங்கி 12 மணி வரை மிதமான மழை பெய்தது. இதனால் சாலை ஓரங்களில் மழைநீர் தேங்கி நின்றது. இந்த மழையால் ஓரளவு வெப்பம் தணிந்தது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தென்மாவட்டங்களில் பலத்தமழை வெயிலுக்கு மாற்றாக இதம் தந்தது</u>**

திருநெல்வேலி : நெல்லையில் நேற்று பலத்த மழை பெய்தது. தென் மாவட்டங்களில் நேற்று காலை பலத்த மழை பெய்தது. அதிகாலை யில்

இருந்தே கன்னியாகுமரி மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது. காலை ஏழு மணிக்கு பிறகு நெல்லை மாவட்டத்திலும் பலத்த மழை பெய்தது. நெல்லையின் புறநகர் பகுதிகளில் ஒரு மணிநேரம் தொடர்ந்து அடைமழை போல பெய்தது. நெல்லையில் கடந்த சில தினங்களாக வெயிலின் தாக்கம் கோரமாக இருந்த நிலையில் நேற்றைய மழை, குளிர்ச்சியை தந்தது. நேற்று மாலைவரையிலும் சூரிய வெளிச்சமே தெரியாமல் நவம்பர், டிசம்பர் மழைக்காலம் போல இருந்தது. வழக்கமாக வெயில் கால சீசன் வியாபாரமான கரும்புசாறு , பழச்சாறு கடைகளில் கூட்டம் இல்லை.

## கற்பூரவள்ளி வாழை ரூ.560க்கு விற்பனை

திருச்சி: திருச்செந்துறை வாழை வணிக வளாக ஏலத்தில், கற்பூர வள்ளி வாழைத்தார் அதிகபட்சமாக, 560 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. திருச்சி மாவட்டம், திருச்செந்துறையில் வாழை வணிக வளாகம் அமைந்துள்ளது. நடப்புவாரம் கிளியநல்லூர், சிறுகாம்பூர், கொப்பாவளி, ராமகிரிபட்டி, கடியாக்குறிச்சி, ஸ்ரீரங்கம், திருவாளர்ச்சோலை, சென்னக்கரை, முள்ளிக்குரும்பூர், குழுமணி, ஆமூர், தொட்டியம், வாத்தலை, செங்குடி, ஜீயபுரம், மேலூர், அயிலாப்பேட்டை ஆகிய கிராமங்களை சேர்ந்த, 34 விவசாயிகள், 1,062 வாழைத் தார்களை விற்பனைக்கு கொண்டு வந்தனர். பெருகமணி, சிறுகமணி, ஜீயபுரம், கடியாக்குறிச்சி, புத்தூர், ஏர்போர்ட் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த, 18 வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டு, 92 ஆயிரத்து, 735 ரூபாய்க்கு ஏலம் எடுத்தனர். ஏலத்தில் ரஸ்தாலி அதிகபட்சமாக, 250 ரூபாய்க்ககும், பூவன் தார், 270 ரூபாய், பச்சநாடன் தார், 275 ரூபாய், மொந்தன் தார், 210 ரூபாய், நேந்திரன் தார் 215 ரூபாய், ஏலரசி தார், 135 ரூபாய், போயன் தார், 260 ரூபாய், அதிகபட்சமாக கற்பூரவள்ளி தார், 560 ரூபாய்க்கும் விலை போனது.

## நடுவலூரில் கால்நடை மருத்துவமனை திறப்பு

துறையூர்: துறையூர் அருகே, நடுவலூரில் புதிய கால்நடை மருத்துவமனை திறப்பு விழா நடந்தது. திருச்சி மாவட்ட கலெக்டர் பழனிச்சாமி தலைமை வகித்து பேசினார். பஞ்சாயத்து தலைவர் மோகன் வரவேற்றார். அமைச்சர் பூனாட்சி, மருத்துவமனையை திறந்து வைத்து, நலத்திட்ட உதவி வழங்கினார். விழாவில், எம்.எல்.ஏ., இந்திராகாந்தி, கால்நடை துறை திருச்சி மண்டல இணை இயக்குநர் செல்லசாமி, உதவி இயக்குநர்கள் திருச்சி மருதராஜ், ஸ்ரீரங்கம் துரைசாமி, முசிறி செல்வராஜ் பேசினர். மாவட்ட பஞ்., தலைவர் ராஜாத்தி, யூனியன் தலைவர் பிச்சையம்மாள், சி.எம்.எஸ்., தலைவர் மோகன்தாஸ், கவுன்சிலர்கள் ரவிச்சந்திரன், ஸ்ரீதர் உள்பட பலர் பங்கேற்றனர்.

## விளைச்சல் பாதிப்பால் பட்டாணி விலை அதிகரிப்பு

கொடைக்கானல்: விளைச்சல் பாதிப்பால் கொடைக்கானல் பச்சைப் பட்டாணி விலை அதிகரித்தது. கொடைக்கானல் பூண்டி, குண்டுப்பட்டி, கூக்கால், கவுஞ்சி, மன்னவனூர், பூம்பாறை பகுதிகளில் பச்சைப் பட்டாணி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் பட்டாணி பெங்களூரு, சென்னை, கோவை, மதுரைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இவை 3 மாதங்களில் அறுவடைக்கு வரும். பிப்வரியில் பெய்த மழையால் பயிர்கள் அழுகி விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால் சீசன் சமயத்தில் தினமும் 10 டன் வரை விற்பனை செய்யப்பட்ட பட்டாணி ஒன்றரை டன்னாக குறைந்தது. வரத்து குறைந்ததால் இதே சீசனில் கிலோ ரூ.25 க்கு விற்கப்பட்ட பட்டாணி ரூ.50 ஆக உயர்ந்தது. விலை கிடைத்தும் விளைச்சல் பாதிப்பால் விவசாயிகள் கவலை அடைந்தனர். பூம்பாறை வியாபாரி ஒருவர் கூறுகையில்,"பெங்களூரு, சென்னை மார்க்கெட்டிற்கு ராஞ்சி

பட்டாணி வரத்து அதிகரித்தபோதிலும், கொடைக்கானல் பட்டாணிக்கு எப்போதும் கிராக்கி உள்ளது. இதனால் விலை உயர்ந்தது," என்றார்.

**பண்ணை கழிவுகள் மூலம் மண்புழு உரம்**

நத்தம்: நத்தம் பகுதியில் மா, கொய்யா, தென்னை, புளி ஆகிய பயிர்களுடன் பயறு வகைகளும் பயிர் செய்யப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக கால்நடைகளின் வளர்ப்பு குறைந்து வருகிறது. பண்ணை எரு பற்றாக்குறை நிலவுகிறது. அதிக அளவு ரசாயண உரம் பயன்படுத்தப்படுகிறது. இதனை தவிர்க்க பண்ணைகளில் வீணாகும் காய்கறி, காளாண், சருகுகள், இலைகள், செடிகள் ஆகியவற்றை பயனுள்ள உரமாக மாற்ற மண்புழு குடில்கள் அமைக்கலாம். எளிய முறையில் வீட்டின் புறக்கடை பகுதிகளில் தரையிலேயே திடல் அமைக்கலாம். சில்பாலின் கொண்டும் மண்புழு குடில் அமைக்கலாம். இதன் மூலம் கழிவுகளை 45 நாட்களில் மண்புழு கொண்டு சுற்றுச் சூழலுக்கு உகந்த எருவாக மாற்றலாம். அனைத்து வகை பயிர்களுக்கும் இதை பயன்படுத்தலாம். நத்தம் அருகே பரளிபுதூரில் "அட்மா' திட்டத்தின் கீழ் பண்ணைப்பள்ளி மூலமாக இதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு 04544234399 என்ற எண்ணில் நத்தம் வேளாண் மை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**மிகுந்த ஆர்வம் ! : கறிக்கோழி வளர்ப்பில் லாபம் ஈட்ட விவசாயிகள்... : மழை குறைந்ததால் கைகொடுத்த மாற்று தொழில்**

தியாகதுருகம்: பருவமழை தொடர்ந்து ஏமாற்றியதால் விவசாயம் கைகொடுக்காத நிலையில் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் பலர், மாற்று தொழிலாக இறைச்சி கோழிகளை வளர்ப்பதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். பருவமழை கடந்த 3 ஆண்டுகளாக குறைந்ததால் தியாகதுருகம் பகுதியில் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நீர்நிலைகளுக்கு தண்ணீர் இன்றி வறண்டு கிடப்பதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டது. இப்பகுதியில் கரும்பு அதிகம் சாகுபடி

செய்வதால் இப்பயிருக்கு ஆண்டுமுழுவதும் தண்ணீர் தேவை அவசியமாகும். கிணற்று நீர் பாசனம் கைகொடுக்காத நிலையில் பல இடங்களில் கரும்பு வாடிய நிலையில் கருகும் அபாயத்தில் உள்ளது. தண்ணீர் பற்றாக்குறையை தீர்க்க கிணற்றை ஆழப்படுத்தியும் எதிர்பார்த்த நீர் ஊற்றெடுக்காததால் செய்வதறியாது தவித்து வருகின்றனர். மானாவாரி பயிர்களான பருத்தி, கம்பு, உளுந்து ஆகிய பயிர்கள் மட்டும் ஓர ளவு லாபத்தை கொடுத்தது. தண்ணீர் வளம் குறைந்ததால் நெல் சாகுபடிபரப்பு குறைந்து விட்டது. இதனால் வருவாய் வாய்ப்பு இன்றி சிறு விவசாயிகள் பலர், கூலி வேலைக்கு செல்லும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. இச்சூழலில் விவசாயம் தவிர்த்து விளைநிலங்களிலேயே மாற்று தொழில் செய்வதில் விவசாயிகளின் கவனம் திரும்பியுள்ளது. விவசாயத்திற்கு மாற்றாக கோழி வளர்ப்பில் ஆர்வம் செலுத்த துவங்கி விட்டனர். இதற்கு தனியார் கோழி பண்ணை நிறுவனங்கள் உதவி செய்கின்றன. கோழிகளை வளர்க்க "ஷெட்' அமைக்க குறைந்தது 5 லட்சம் ரூபாய் முதலீடு தேவைப்படுகிறது. இதற்கு வங்கிகள் கடன் வழங்குகின்றன. இதற்காக 21 அடி அகலம், 240 அடி நீளத்திற்கு "ஷெட்' அமைத்து சுற்றிலும் கம்பி வேலி அமைக்கின்றனர். குறைந்தது 5,000 சதுர அடி அளவுள்ள "ஷெட்' உள்ளே 4,000 கோழிகள் வரை வளர்க்க முடியும். தேங்காய் நார் பரப்பி, சிமெண்ட் கூரை மீது தென்னை கீற்றுகளை பரப்பி கோழிகளை வெப்பம் தாக்காமல் பாதுகாக்கின்றனர். தனியார் நிறுவனங்கள் மூலம் ஒரு குஞ்சு 25 ரூபாய் என்ற விலையில் வழங்கப்படுகிறது. இவைகளுக்கு தேவையான தீவனம், மருந்து உள்ளிட்டவைகளையும் அவர்களே கொடுத்து விடுகின்றனர். மருத்துவர்களையும் அவ்வப்போது அனுப்பி நோய் தாக்காமல் பாதுகாத்துக்கொள்வது குறித்து ஆலோசனை மற்றும் சிகிச்சை அளிக்கின்றனர். இதற்கான தொகை கணக்கில் வைக்கப்பட்டு கோழிகளை வளர்த்து கொடுத்ததும் அதில் கழித்து மீதி பணத்தை விவசாயிகளுக்கு கொடுக்கின்றனர். குஞ்சுகளை வழங்கும் நிறுவனங்

களை தவிர்த்து கோழிகள் வளர்ந்ததும் வேறு யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது என்பது முக்கிய நிபந்தனையாகும். கோழிக்குஞ்சுகள் 45 நாட்களில் வளர்ந்து விற்பனைக்கு தயாராகிறது. தற்போதைய மார்கெட் நிலவரப்படி ஒரு கிலோவிற்கு 63 ரூபாய் கொடுத்து தனியார் நிறுவனங்கள் கோழிகளை கொள்முதல் செய்து கொள்கிறது. லாபத்தில் 50 சதவீத தொகையை விவசாயிகளுக்கு கொடுக்கிறது. நஷ்டம் ஏற்பட்டால் ஒரு கிலோவிற்கு 3.50 ரூபாய் இழப்பீட்டு தொகையாக வழங்குகின்றனர். சராசரியாக 3 மாதத்திற்கு ஒருமுறை 4,000 கோழிகளை வளர்த்து விற்பனை செய்வதன் மூலம் ஆண்டுக்கு செலவுகள் போக 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் லாபம் ஈட்ட முடியும். கோழி பராமரிக்கும் வேலைகளை கூலியாட்களை வைக்காமல் குடும்ப உறுப்பினர்களே செய்தால் கூடுதல் லாபம் பெறமுடியும். விவசாயம் சார்ந்த தொழி லாக இறைச்சி கோழி வளர்ப்பு நல்ல லாபம் ஈட்டி தருகிறது. இதன் கழிவுகள் வயலுக்கு உரமாக பயன்படுத்தி பயிர் மகசூலையும் பெருக்க முடிகிறது. பருவமழை குறைந்து விவசாயம் கைகொடுக்காத நிலையில் இறைச்சி கோழி வளர்ப்பு மூலம் வருவாய் ஈட்டுவதில் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் பலரின் கவனம் திரும்பியுள்ளது.

<u>**விவசாயிகள் சங்க பேரவை கூட்டம்**</u>

தியாகதுருகம்: தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட பேரவை கூட்டம், தியாகதுருகத்தில் நடந்தது. தியாகதுருகம் சமுதாயபராமரிப்பு கமிட்டி திருமண மண்டபத்தில் நடந்த கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் ஸ்டாலின்மணி தலைமை தாங்கினார். பொருளாளர் சீனுவாசன் முன்னிலை வகித்தார். வட்ட செயலாளர் மணி வரவேற்றார். மாநில செயலாளர் சுப்ரமணியன், துணைத்தலைவர் முகமதுஅலி, முன் னாள் செயலாளர் ஏழுமலை, பொருளாளர் சின்னப்பா ஆகியோர் பேசினர். தனியார் சர்க்கரை ஆலைகள் நிலுவை தொØயை விவசாயிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு அறிவித்த

தொகையை தனியார் ஆலைகள் வழங்க வேண்டும். நிலம் கையகப் படுத்தும் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து இயக்கம் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. சாந்த மூர்த்தி நன்றி கூறினார்.

## <u>மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடி செய்ய முயற்சி</u>

தேனி: தேனி மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடி செய்ய தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேனி மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடி இல்லாமல் இருந்தது. சோதனை முறையில் ஒரு சிலர் மட்டும் சாகுபடி செய்தனர். தற்போது நவீன தொழில்நுட்பங்கள் வந்துள்ள நிலையில் மஞ்சள் சாகுபடிக்கு அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது. சித்தார்பட்டி, கன்னியப்பபிள்ளைபட்டி, டி.சுப்புலாபுரம், பெரியகுளம், லட்சுமிபுரம் பகுதியில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மஞ்சள் விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகளும் ஆர்வம் காட்டி வருகின்றனர். சோதனை முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த மஞ்சள் சாகுபடியில் விளைச்சல் அதிகம் இருந்தால், விரைவில் வர்த்தக ரீதியாக சாகுபடி தொடங்கும் என தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>"புறக்கடை' கோழி வளர்ப்பு திட்டத்தில் ஒரு நபருக்கு 45 கோழிகள் இலவசம்</u>

உத்தமபாளையம்: ஒரு நபருக்கு 45 கோழிகள் இலவசமாக வழங்கும் "புறக்கடை' கோழி வளர்ப்பு திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கோழி வளர்க்க விரும்புபவர்கள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட கால்நடை மருத்துவமனைகளில் வழங்கலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளது. கால்நடை பராமரிப்புத் துறை மூலம் தனிநபர் வருவாயை அதிகரிக்க "புறக்கடை' கோழி வளர்ப்பு திட்டம் என்ற பெயரில் புதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் தேனி மாவட்டத்தில் 440 பேருக்கு கோழிகள் இலவசமாக வழங்குகின்றனர். உத்தமபாளையம் கோட்டத்தில் மட்டும் 220 பேருக்கு கோழிகள்

வழங்கப்படவுள்ளது. இதில் 33 சதவீதம் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. உத்தமபாளையம் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குனர் ஜெகதீசன் கூறியதாவது : புறக்கடை கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களின் வருவாயை அதிகரிக்க இலவசமாக கோழிகள் வழங்கப்படுகிறது. இதில் ஒரு நபருக்கு 45 கிரிராஜா கோழிகள் மூன்று தவணைகளாக வழங்கப்படும். முதல் தவணையாக 25, இரண்டாவது 15, மூன்றாவது 10 கோழிகள் வழங்கப்படும். வீட்டின் பின்பக்கம் காலியாக உள்ள இடத்தில் வளர்க்க வேண்டும். இதற்கென செட் அமைக்க ரூ. 750 மானியமாக தரப்படும். 14 வாரங்கள் கோழிகளை வளர்த்து கிடைக்கும் முட்டைகளை விற்று பயனடையலாம். இந்த திட்டத்தின் கீழ் தற்போது விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது. விருப்பமுள்ளவர்கள் சம்பந்தப்பட்ட கால்நடை மருத்துவமனைகளில் விண்ணப்பிக்கலாம், என்றார்.

## <u>சிங்கம்புணரி விவசாயிக்கு குளிர்பதன கிடங்கு வசதி</u>

சிங்கம்புணரி: சிங்கம்புணரியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூட குளிர் பதன சேமிப்பு கிட்டங்கி வசதியை விவசாயிகள் பயன்படுத்தி பயன் பெறலாம் என வேளாண் துணை இயக்குனர் சவுந்தரராஜன் கேட்டுக் கொண்டுள்ளார். நெல், நிலக்கடலை, வாழை, பருத்தி, தென்னை, சிறுதானியங்கள்,சாகுபடி செய்யும் விவசாயிகள், அறுவடை செய்த பொருட்களை கிட்டங்கியில் 6 மாதம் வரை இருப்பு வைக்கலாம். குறைந்த சீரான சீதோஷ்ண நிலையில் விளைபொருட்களை வைப்பதால் வாழ்நாள் அதிகரிக்கிறது. குளிர்பதன கிட்டங்கியில் பால் பொருட்கள், ஆப்பிள், உருளைக்கிழங்கு, உலர் பழங்கள், உணவுப் பொருட்கள், இறைச்சி,மீன் முட்டை, காய்கறிகள்,புளி ஆண்டு முழுவதும் சேமிக்கலாம். நல்ல விலை கிடக்கும்போது விற்கலாம். ரூ 2.லட்சம் வரை பொருளீட்டு கடன் வசதி உண்டு. சிங்கம்புணரி ஒழுங்கு முறை விற்பனை கூட வளாகத்தில் 25 மெட்ரிக் டன் சேமிக்கும் குளிர்பதன சேமிப்பு வசதி

உள்ளது.மாவட்டத்தில் 5 இடங்களில் சேமிப்பு கிடங்கு வசதி உண்டு என்றும், விவசாயிகள் பயன்படுத்தி கூடுதல் லாபம் பெற வேளாண்மை துணை இயக்குனர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பரமத்திவேலூரில் தர்ப்பூசணி விற்பனை ஜோர்</u>**

பரமத்திவேலூர், : நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூரில் தர்ப்பூசணி பழங்கள் விற்பனை மும்முரமாக நடைபெற்று வருகிறது. கோடை காலம் தொடங்கியதை அடுத்து, நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூரில், தர்ப்பூசணி வரத்து அதிகரித்துள்ளது. தமிழகத்தில் மரக்காணம், கடலூர், திண்டிவனம், விழுப்புரம் உள்ளிட்ட இடங்களில் இருந்து தர்ப்பூசணி விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. தற்போது கிலோ தி17 முதல் 20 வரை விற்பனை செய்யப்படுகிறது. வெயிலின் கொடுமை வாட்டி வருவதால், வாகனங்களில் செல்பவர்கள் மற்றும் பாதசாரிகள், தர்ப்பூசணி யை அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர். இதன் காரணமாக, சாலையோர கடைகளில் தர்ப்பூசணி விற்பனை களைக்கட்டியுள்ளது.

**<u>நாள் ஒன்றுக்கு 2.71 லட்சம் லிட்டர் ஆவின் பால் கொள்முதல் கோடையிலும் அதிகரிப்பு</u>**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் ஆவின் பால் கொள்முதல் கோடை யிலும் அதிகரித்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மூலம் ஆவின் நிறுவனத்திற்கு தினந்தோறும் பால் கொள்முதல் செய்து அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் பால், சித்தோடு பகுதியில் உள்ள ஆவின் பண்ணைக்கு கொண்டு வரப்பட்டு அங்கு முறையாக சுத்திகரித்து பாக்கெட்டுகளில்

அடைக்கப்பட்டு நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள பாலை சென்னை போன்ற பெரு நகரங்களுக்கும் அனுப்பி வைக் கின்றனர். அதன்படி ஈரோடு மாவட்டத்தில் உள்ள 687 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மூலம் தற்போது 2.71 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு கோடை காலத்தில் பால் கொள்முதல் உயர்ந்துள்ளதாக ஆவின் நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதுகுறித்து ஆவின் வட்டாரத்தில் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் கடந்த 2013-14ம் ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் ஆவின் நிறுவனத்தில் பால் கொள்முதல் வெகுவாக குறைந்து போனது. நுகர்வோரிடம் இருந்து குறைந்த விலைக்கு பால் விலை நிர்ணயம் செய்திருந்ததும் பால் கொள்முதல் குறைந்து போக காரணமாக இருந்தது. இந்நிலையில் தமிழக அரசு பசும்பால் விலை ரூ.28 ஆகவும், எருமைப்பாலின் விலையை ரூ.35 ஆகவும் விலை உயர்த்தி வழங்கியது. மேலும் 2014ம் ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை ஓரளவு நன்றாக பெய்ததன் காரணமாக கால்நடைகளுக்கான தீவனபற்றாக்குறை ஓரளவு நிவர்த்தியும் ஆனது. எனவே தற்போது கோடை காலம் துவங்கிய போதிலும் பால் கொள்முதல் குறையவில்லை. கடந்த ஆண்டு இதே சீசனில் நாள் ஒன்றுக்கு 2.30 லட்சம் லிட்டர் முதல் 2.35 லட்சம் லிட்டர் மட்டுமே பால் கொள்முதல் ஆனது. இந்த ஆண்டு நாள் ஒன்றுக்கு 2.71 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் ஆகிறது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் நாள் ஒன்றுக்கு 35 ஆயிரம் லிட்டர் பால் கூடுதலாக கொள்முதல் ஆகிறது. கடந்த மாதம் 2.60 லட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் இந்த மாதம் 2.71 லட்சம் லிட்டராக அதிகரித்திருப்பதற்கு காரணம் நுகர்வோருக்கு தாமதமின்றி பால் கட்டணத்தை வழங்குவதும் பால் கொள்முதல் உயர்ந்துள்ளதற்கு முக்கிய காரணமாக உள்ளது. இவ்வாறு ஆவின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மாவட்டத்தில் வேளாண் தொழிலை நவீனப்படுத்த ரூ.10 கோடி மானியம்

திருப்பூர், : திருப்பூர் மாவட்டத்தில் வேளாண்மையை இயந்திர மயமாக்குதல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசிடம் ரூ.10 கோடி மானியம் பெறப்பட்டுள்ளது. திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட நிர்வாகக் குழுக் கூட்டம் நடந்தது. இதில் கலெக்டர் கோவிந்தராஜ் பேசியதாவது: திருப்பூர் மாவட்டத்தில் வேளாண்மை துறையை நவீனமயமாக்க அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. வேளாண் இயந்திரமாக்குதல் இயக்கத்திற்கு ரூ.6.48 கோடி, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் ரூ.3.75 கோடி மானியம் வழங்க அரசு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களிலும் அரசு நிதி ரூ.10 லட்சம் மானியத்தில் விவசாயிகளின் பங்களிப்பு ரூ.15 லட்சத்தில் வேளாண் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையம் அமைக்க இக்குழுவின் மூலம் ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேலும், அரசின் நலத் திட்டங்கள் சரியான முறையில் விவசாயிகளுக்கு சென்றடைய அனைத்து அதிகாரிகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இவ்வாறு கலெக்டர் கூறினார். இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் (பொறுப்பு) ரூபன் சங்கர்ராஜ், நபார்டு வங்கி உதவிப் பொதுமேலாளர் ஸ்ரீராம், கோவை வேளாண்மை பல்கலைக்கழகப் பேராசிரியர் தாஜ்தீன், இணை இயக்குநர் மகேந்திரன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் சென்னியப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## காய்கறி கண்காட்சி போட்டியில் பங்கேற்க விவசாயிகளுக்கு அழைப்பு

ஊட்டி, :காய்கறி கண்காட்சியில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் இன்று முதல் வரும் 24ம் தேதி வரை விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் மணி

வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: மே மாதம் 2 மற்றும் 3ம் தேதியில் கோத்தகிரியில் உள்ள பூங்காவில் 8வது காய்கறி கண்காட்சி நடக்கிறது.இக்காய்கறி கண்காட்சியை முன்னிட்டு காய்கறி தோட்டம் போட்டி நடத்தப்படுகிறது.இதில் தங்கள்தோட்டத்தில் காய்கறி பயிரிட்டுள்ள விவசாயிகள் பங்கேற்கலாம்.போட்டியின் போது அதிகாரிகள் குழுவினர் விவசாயிகளின் தோட்டங்களை பார்த்து ஆய்வு செய்வர். பிறகு வெற்றி பெற்றவர்கள் அறிவிக்கப்பட்டு பரிசு வழங்கப்படும். இதற்கான விண்ணப்பங்கள் வரும் 8ம் தேதி முதல் இம்மாதம் 24ம் தேதி வரை கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வழங்கப்படும்.விவரங்களுக்கு கோத்தகிரியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநரை அணுகி அறிந்து கொள்ளலாம். இவ்வாறு இணை இயக்குநர் மணி கூறியுள்ளார்.

**ஏப்ரல், மே மாதங்களில் எள் விலை எவ்வளவு? வேளாண் விற்பனை மையம் கணிப்பு**

திருச்சி,: ஏப்ரல்-மே மாதங்களில் அறுவடைக்கு வரும் தரமான சிவப்பு எள்ளின் விலை குவிண் டாலுக்கு எவ்வளவு இருக்கும் என வேளாண் விற்பனை மையம் ஆய்வு செய்தது.தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டம் எள் உற்பத்தியில் முன்னணி வகிக்கிறது. கரூர், தஞ்சை மற்றும் கடலூர் மாவட்டங்கள் எள் உற்பத்தியல் முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் எள் சாகுபடி பா சன பயிராக டிசம்பர்-ஜனவரி மாதங்களில் பயிரிடப்பட்டு தொடர்ந்து ஏப்ரல்- மே மாதங்களில் அறுவடை செய்யப் படுகிறது. கடந்த தைப்பட்டத்தில் ஈரோடு மாவட்டத்தில் சாகுபடி பரப்பு கடந்த வருடத்தை காட்டிலும் 40 எக்டர் அதிகரித்து காணப் படுகிறது. ஏற்றுமதி சந் தையை பொருத்தமட்டில், சீனா தனக்கு தேவையான எள்ளை ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து நல்ல தரத்துடன் இந்தியாவை காட்டிலும், குறைந்த விலையில் இறக்குமதி செய்கின்றன. தமிழ்நாட்டில் எண் ணெய் உற்பத்தியாளர்கள் மேற்கு வங்க மாநிலத்தில் இருந்து நடப்பு

உள்ளூர் விலையை விட குறைந்த விலைக்கு தருவிக்கின்றனர். தற்சமயம் சிவப்பு எள், சிவகிரி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் குவிண்டாலுக்கு ரூ.6800- 8000 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து, திருச்சி வேளாண்சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மைய துணை இயக்குனர் சந்திரசேகர் கூறுகையில், ஏப்ரல்-மே மாதம் அறுவடைக்கு வரும் எள்ளின் உத்தேச விலை நில வரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக,தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையம் அலுவலகம், சிவகிரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் 15 வருட விலைகளை ஆய்வு செய்து வர்த்தக ஆய்வுகளை மேற்கொண் டது. ஆய்வுகளின் முடிவில், ஏப்ரல்-மே மாதங்களில் அறுவடைக்கு வரும் தரமான சிவப்பு எள்ளின் விலை குவிண்டாலுக்கு ரூ.7,500 முதல் ரூ.7,700 வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் விலை அதிகரிக்க குறைவான வாய்ப்பு காணப்படுகிறது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த எள்ளை உடனடியாக விற்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர் என்றார்.

## <u>ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 245 குவிண்டால் பருத்தி ரூ. 9.30 லட்சத்துக்கு ஏலம் கலெக்டர் தகவல்</u>

பெரம்பலூர், : எளம்பலூர் ஒழுங்குமுறை விற் பனைக் கூடத்தில் நடை பெற்ற 245 குவிண்டால் பருத்தி, ரூ. 9.30 லட்சத்திற்கு ஏலத்தில் விற்பனை ஆனது என கலெக்டர் தெரிவித்துள்ளார். பெரம்பலூர் அருகேயுள்ள எளம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இந்திய பருத்திக்கழகத்தின் மூலம் நேற்று ஏல முறையில் பருத்தி விற்பனை நடைபெற்றது. இந்த மறைமுக ஏல விற்பனைக்காக 44 விவசாயிகள் தாங்கள் விளைவித்த 245 குவிண்டால் எடைகொண்ட 695 மூட்டை பருத்தியை கொண்டு வந்தனர். பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்த 6 வியாபாரிகள் ஒவ்வொரு விவசாயிகளின் மூட்டையாக பருத்தியின்

தரத்தை சோதித்து அதற்கான தங்களது விலையை அதிகாரிகளிடம் அளித்தனர். அதிகவிலை நிர்ணயித்து கேட்ட வியாபாரிக்கு, விவசாயியின் அனுமதியுடன் விற் பனை செய்யப்பட்டது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நவீன எலக்ட்ரானிக் எடை இயந்திரத்தினை கொண்டு சரியான எடையும், எந்தவித தரகும் இன்றி விற்பனையாவதால் விவசாயிகள் நிம்மதியடைந்தனர். இந்த பருத்தி ஏலமுறை விற்பனையை மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது நேரில்பார்வையிட்டு ஆய்வுசெய்தார். பின்னர் விற்பனை குறித்து கலெக்டர் தெரிவித்ததாவது : இந்திய பருத்தி கழகதத்தின் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தியை கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏலத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 44 விவசாயிகள் 245 குவிண்டால் எடையுள்ள 695 மூட்டை பருத்தியினை ஏல விற்பனைக்கு கொண்டு வந்தார்கள். மறைமுக ஏலமுறையில் நடைபெற்ற விற்பனை யில் நீண்ட இழை பருத்தியானது குவிண்டால் ஒன்று ரூ. 3,300 முதல் ரூ. 4,129 வரை விற்பனையானது. மிக நீண்ட இழை பருத்தியானது குவிண்டால் ஒன்று ரூ. 3,889 முதல் ரூ. 4,041 வரை விற்பனையானது. இதன்மூலம் இன்றை தினம் 245 குவிண்டால் பருத்தியானது மொத்தம் ரூ. 9.30 லட்சத்துக்கு விற்பனையானது. பருத்தி விவசாயிகள் நன்கு வெடித்த பருத்தியினை அறுவடை செய்து நிழலில் உலரவைத்து 8 சதவீத ஈரப்பதத்துடன் தூசியில்லாமல் சுத்தப்படுத்தி கொண்டுவரும் பட்சத்தில், நல்லவிலை கிடைக்கும். அனைத்து பருத்தி விவசாயிகளும் பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு தாங்கள் சாகுபடிசெய்யும் பருத்தியை கொண்டுவந்து சரியான எடையில் சரியான விலைக்கு விற்பனை செய்து பயன்பெற வேண்டும் எனத் தெரிவித்தார்.

## இயற்கை உரம் கிலோ

ஒவ்வொரு தனி மனிதனும் நாளொன்றுக்கு அரை கிலோ குப்பையை அல்லது கழிவுகளை உருவாக்குகிறான். கோடிக்கணக்கில் மக்கள் வாழும் இந்நாளில் இக்குப்பையை கொண்டு சேர்க்க, புதைத்து வைக்க,

நிலத்துக்கு எங்கே போவது. ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் எதிர்கொள்ளும் அதிமுக்கிய பிரச்னையே குப்பைகளும், கழிவுகளும், அதனை புதைத்திட்ட நிலமும் தான். சுவாமிமலை பேரூராட்சியை பொறுத்தவரை 7,400 பேர் வசிக்கின்றனர். 3,700 கிலோ குப்பை நாளொன்றுக்கு உருவாகிறது. இதை எங்கே கொண்டு சேர்ப்பது, எங்கே புதைத்து வைப்பது. குப்பை கொட்டும் இடத்தில் உருவாகும் நோய்க்கிருமிகள் எவ்வளவு, அதனால் உருவாகும் நோய்கள் எத்தனை, சுற்றச்சூழலை காப்பது எவ்வாறு. எனவே தான் அரசு குப்பைகளை உருவாக்கும் இடத்திலேயே தரம் பிரித்து வழங்க மக்களை கேட்டு கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் சுவாமிமலை பேரூராட்சியின் சில வார்டுகளில் உள்ள தெருக்களில் பேரூராட்சியின் சுயஉதவிக்குழு பெண் உறுப்பினர் வீட்டுக்குவீடு வந்து குப்பையை தரம் பிரித்து வழங்க கேட்டு பெற்று வருகின்றனர். அவ்வாறு வழங்கப்படும் குப்பைகளையும், பேரூராடசி பணியாளர்களின் மூலம் சேகரிக்கப்படும் குப்பைகளையும், பேரூராட்சியின் உரக்கிடங்கில் தரம் வாரியாக பிரித்து மக்கும் குப்பைகளை இயற்கை உரமாக மாற்றியும், மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் உரங்களை பேரூராட்சியால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இயற்கை உரம் கிலோ ஒன்றுக்கு ரூ.5க்கும் மண்புழு உரம் கிலோ ரூ.10க்கும் கிடைக்கிறது. இந்த உரம் பூச்செடிகள், குரோட்டன்ஸ், இயற்கை விவசாயத்துக்கு ஏற்ற ஒன்றாகும்.

## <u>தூத்துக்குடி மாவட்டத்துக்கு 336 டன் துவரம் பருப்பு ஒதுக்கீடு கலெக்டர் தகவல்</u>

தூத்துக்குடி,:தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. பொது மக்களிடம் மனுக்களை பெற்றுக்கொண்ட கலெக்டர் ரவிக்குமார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:பொது விநியோகத்

திட்டத்தின் கீழ் ரேஷன் கடை மூலம் வழங்கப்படும் துவரம்பருப்பு தூத்துக்குடி மாவட்டத்திற்கு 336 டன் ஒதுக்கீடு செய்யப்பட்டு 60 டன் துவரம்பருப்பு கடந்த மாதம் விநியோகம் செய்யப்பட்டது. ஏப்ரல் மாதத்திற்கு 120 டன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதே போன்று உளுந்தம் பருப்பு 105 டன் ஒதுக்கீடு செய்ய டெண்டர் கோரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.தூத்துக்குடி மாவட்டத்தில் 7 நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கடந்த அக்டோபர் 20ம் தேதி முதல் மார்ச் 31ம் தேதி வரை 2 ஆயிரத்து 305 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூ.3 கோடியே 48லட்சம் வழங்கப் பட்டுள்ளது. நெல் கொள்முதல் நிலையம் இல்லாத கிராமங்களில் நடமாடும் நெல் கொள்முதல் வேன் மூலம் 48 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி கலெக்டர் அலுவலகத்தில் மனு அளிக்க வரும் பொதுமக்களுக்கு கழிப்பிட வசதி இல்லாததால் சிரமப்பட்டு வந்தனர். இதற்காக ரூ.7லட்சம் செலவில் புதிய கழிப்பிடம் கட்டப்பட்டு வருகிறது.ஸ்ரீவைகுண்டம் அணை யை தூர் வாருவதற்கு ரூ.1 கோடி நிதி ஒதுக் கீடு செய்து அதற்கான ஆய்வுப்பணி நடந்து முடிந்துள்ளது. 3 இலாக்காக்களிருந்து தடை இல்லா சான்று வந்ததும் பணிகள் தொடங்கும்.இவ்வாறு அவர் கூறினார்.முன்னதாக தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சிபெற்ற 25 மகளிருக்கு சான்றிதழை மாவட்ட கலெக்டர் ரவிக்குமார் வழங்கினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஏரியூரில் ரூ.30 லட்சம் மதிப்பில் பால் குளிரூட்டும் நிலையம் திறப்பு**

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் ஒன்றியம் ஏரியூரில் பால் உற்பத்தியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று 5 ஆயிரம் லிட்டர் பால் குளிரூட்டும் நிலையம் ரூ.30 லட்சம் மதிப்பீட் டில் அமைக்கப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்ட பால் உற் பத்தி யாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் அமைக்கப் பட்டுள்ள இந்த குளிரூட்டும்

நிலையத்தை ஆவின் துணைத் தலைவர் டி.எம்.பெரியசாமி திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் பால் வள துணைப்பதிவாளர் தனபால், துணை மேலாளர் ரங்கசாமி, இயக்குனர் ராஜேந்திரன், கூட்டுறவு சங்க தலைவர் தன்ராஜ், மண்டல அலுவலர் மணிவண்ணன், விரிவாக்க அலு வலர்கள் முருகவேல், ரமேஷ் பாபு மற்றும் பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு சங்க தலைவர்கள் கலந்து கொண்டனர்.

**திருச்செந்துறை வணிக வளாகத்தில் 1,062 வாழைத்தார்கள் ஏலம்**



திருச்சியை அடுத்த திருச்செந்துறையில் உள்ள வாழை வணிக வளாகத்தில் வாழைத்தார்கள் ஏலம் நடைபெற்றது. கிளியநல்லூர், சிறுகாம்பூர், கொப்பாவளி, ராமகிரிபட்டி, கடியாக்குறிச்சி, ஸ்ரீரங்கம், திருவளர்ச்சோலை, சென்னக்கரை, முள்ளிக்குரும்பூர், குழுமணி, ஆமூர், தொட்டியம், வாத்தலை, செங்குடி, ஜீயபுரம், மேலூர், அயிலாப்பேட்டை ஆகிய கிராமங்களிலிருந்து விவசாயிகள் தாங்கள் விளைவித்த வாழைத்தார்களுடன் ஏலத்தில் கலந்து கொண்டனர். பெருகமணி, சிறுகமணி, ஜீயபுரம், கடியாக்குறிச்சி, புத்தூர், கே.கே.நகர், ஏர்போர்ட், சீத்தலைவாய், அரியாவூர், குளித்தலை, அண்ணாநகர் ஆகிய ஊர்களிலிருந்து வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டு வாழைத்தார்களை ஏலம் எடுத்தனர். மொத்தம் ரூ.92 ஆயிரத்து 735 மதிப்பிற்கு ஏலம் நடைபெற்றது. ஏலம் விடப்பட்ட 1,062 வாழைத்தார்களுக்கும் எந்தவித தரகுமின்றி அன்றே விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. ஏலத்தில் பூவன்தார் அதிகபட்சமாக ரூ.270–க்கும், ரஸ்தாளி ரூ.250–க்கும், பச்சலாடன் தார் ரூ.275–க்கும், கற்பூரவள்ளி ரூ.560–க்கும், மொந்தன் ரூ.210–க்கும், நேந்திரன் தார்

ரூ.215–க்கும், ஏலரசி ரூ.135–க்கும், போயன் தார் ரூ.260–க்கும் ஏலம் போனது. அடுத்த ஏலம் வருகிற 11–ந் தேதி நடைபெறுகிறது.

## அவினாசியில் ரூ.30 லட்சத்துக்கு பருத்தி ஏலம்



அவினாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பிரதி வாரம் புதன்கிழமை பகல் 12 மணி முதல் மாலை வரை பருத்தி ஏலம் நடைபெறும். அதே போல் நேற்று நடந்த பருத்தி ஏலத்திற்கு கோபி, சிறுவலூர், பெருந்தொழுவு, கொளப்பலூர் ஆகிய பகுதிகளில் இருந்து 2,500 பருத்தி மூடைகள் வந்திருந்தன. இது கடந்த வாரத்தை காட்டிலும் 1,000 மூடைகள் அதிகமாகும். இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் டி.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4,100 முதல் ரூ.4,650 முதல் ரூ4,200 வரையிலும், ஆர்.சி.எச். ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4,000 முதல் ரூ.4,400 வரையும், மட்ட ரகம் ரூ.1,800 முதல் ரூ.2,200 வரையிலும் வியாபாரிகள் ஏலத்தில் எடுத்தனர். ஏலத்தில் திரளான விவசாயிகளும், வியாபாரிகளும் கலந்து கொண்டனர். கடந்த வாரத்தை காட்டிலும் பருத்தி ரகங்கள் குவிண்டால் ரூ.300 முதல் ரூ.500 வரை விலை அதிகரித்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். ஏலத்தின் மொத்த மதிப்பு ரூ.30 லட்சம் ஆகும். இந்த தகவலை சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

**மக்காச்சோள விதைகள் மானியத்தில் வினியோகம் வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்**



திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி வட்டாரம் வறட்சிக்கு இலக்கான பகுதியாகும். இந்த வட்டாரத்தில் 12 ஆயிரம் எக்டேருக்கும் மேலாக மானாவாரி பயிர்களான சோளம், நிலக்கடலை, பயிறுவகை பயிர்களே பெரும்பாலும் சாகுபடி செய்யப்படுகிறது. கிணறு பாசனம் உள்ள பகுதிகளில் மட்டும் இறவை பயிராக மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. தற்போது வேளாண்மைத்துறை மூலம் சித்திரை பட்டத்தில் பயிரிட தரமான ஒட்டுரக மக்காச்சோள விதைகள் ஊத்துக்குளி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலமாக விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து ஊத்துக்குளி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அரசப்பன் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:– தற்போது உணவு உற்பத்தியில் பெரும் பங்குவகிப்பதும், விவசாயிகளுக்கு லாபகரமான பயிராக இருப்பதும் மக்காச்சோளம். தற்போது சித்திரைப்பட்டத்தில் பயிரிட மிகவும் ஏற்ற ரகமான பயோ 9637 என்ற ஒட்டுரகம் ஊத்துக்குளி வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி ஊத்துக்குளி வட்டார விவசாயிகள் தரமான ஒட்டுரக மக்காச்சோள விதைகளை வாங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். தற்போது மக்காச்சோளத்தில் விளைச்சலை அதிகரிக்கக் கூடிய நுண்ணூட்டச்சத்தும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தேவைப்படும் விவசாயிகள் விதையுடன் நுண்ணூட்ட சத்தையும் வாங்கி பயன் பெறலாம். உயர் விளைச்சல் பெற மக்காச்சோள சாகுபடிக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயிகளுக்கு பயிர் சேத இழப்பீடு உயர்வு: முத்ரா வங்கியை தொடங்கி வைத்த பிரதமர் மோடி அறிவிப்பு



முத்ரா வங்கியைத் தொடங்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி, கன மழை, புயல் காரணமாக பாதிக்கப்படும் விவசாயிகளுக்கான பயிர் சேத இழப்பீடு உயர்த்தப்படுவதாக அறிவித்தார். சிறிய தொழில் முனைவோருக்கு உதவும் வகையில் ரூ.10 லட்சம் வரையில் கடன் கொடுக்க வழிவகுக்கும் முத்ரா வங்கியை பிரதமர் நரேந்திர மோடி இன்று (புதன்கிழமை) தொடங்கி வைத்தார். இந்த வங்கிக்கான வழிகாட்டு முறைகளும், அதாவது எத்தகையோருக்கு கடன் கிடைக்கும் என்பதற் கான கொள்கை விளக்கமும் வெளியிடப்பட்டது. முத்ரா வங்கியின் முதலாவது கிளையை டெல்லியில் தொடங்கி வைத்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "நாட்டிலுள்ள பெரிய தொழில் நிறுவனங்கள் 1.25 கோடி மக்களுக்கு மட்டுமே வேலைவாய்ப்பை அளிக்கின்றன. சிறு தொழில் நிறுவனங்கள் சுமார் 12 கோடி மக்களை பணியில் அமர்த்தியுள்ளன.

### பயிர் சேத இழப்பீடு உயர்வு

நிதி கிடைக்கப்பெறாத சிறு தொழில் முனைவோருக்கு கடன் உதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டு முத்ரா வங்கி செயல்படும். நம் நாட்டில் சேமிப்புப் பழக்கத்தை வலுப்படுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இயற்கைச் சீற்றத்தால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு மழை குறைவு காரணமாகவும், இந்த ஆண்டு காலம் தவறிய மழை வெள்ளத்தாலும் விவசாயம்

வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. பயிர் சேதங்கள் தொடர்பாக ஆய்வு செய்வதற்கு அமைச்சர்கள் நேரடிப் பணிகளை மேற்கொள்வர்.

50 சதவீத பயிர் சேதத்துக்கு இழப்பீடு என்பதை 33 சதவீதமாக குறைக்கப்படும். இதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக இழப்பீடு கிடைக்கும். மேலும், பயிர் சேதங்களுக்கான இழப்பீட்டுத் தொகையை ஒன்றரை மடங்காக உயர்த்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், முன்பு ரூ.100 இழப்பீடு பெற்றவர்களுக்கு இனி ரூ.150 கிடைக்கும்; முன்பு ரூ.1 லட்சம் பெற்றிருந்தால், இப்போது ரூ.1.5 லட்சம் கிடைக்கும். அதாவது இழப்பீடு 50 சதவீதம் உயர்த்தப்படுகிறது" என்றார் பிரதமர் மோடி.

**முத்ரா வங்கி குறித்து...**

முத்ரா வங்கி குறித்த அறிவிப்பை நடப்பு நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டில் மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி வெளியிட்டார். தொடக்கத்தில் சிட்பி வங்கியின் துணை அமைப்பாக இந்த முத்ரா வங்கி தொடங்கப்படுகிறது. நாட்டில் மொத்தம் 5.77 கோடி சிறு, குறு மற்றும் நடுத்தர ரகத் தொழில் நிறுவனங்கள் இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் அதிக வட்டிக்கு கடன் வாங்கி அவதிப்படாமல் நியாயமான வட்டி கிடைக்க வகை செய்வதற்காக முத்ரா வங்கி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சிறு, குறு தொழில்கள் அதிக வேலை வாய்ப்பை உருவாக்கும் துறையாகத் திகழ்வதால் எளிதில் கடன் பெறுவதற்கான வழிவகை செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முத்ரா வங்கிக்கு முதலீடாக ரூ.20 ஆயிரம் கோடி நிதியும், கடன் வழங்குவதற்காக ரூ.3 ஆயிரம் கோடியும் ஒதுக்கப்படுவதாக பட்ஜெட்டில் ஜேட்லி தெரிவித்திருந்தார். கடன் உதவித் திட்டங்களுக்கு சிஷு, கிஷோர், தருண் என பெயரிடப் பட்டுள்ளது. ரூ.50 ஆயிரம் வரையிலான கடன் திட்டங்கள் சிஷு எனப்படும். ரூ.50 ஆயிரத்துக்கு மேற்பட்டு ரூ.5 லட்சம் வரையிலான கடன் திட்டங்கள் கிஷோர் எனப்படும். ரூ.5 லட்சத்துக்கு மேல் ரூ.10

லட்சம் வரையிலான கடன் திட்டங்கள் தருண் எனப்படும். பிரதம மந்திரி முத்ரா யோஜனா திட்டத்தின் கீழ் இந்தக் கடன் உதவித் திட்டங்கள் அளிக்கப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் சிறு தொழில் உற்பத்தி நிறுவனங்கள், சிறிய வணிக கடைகள், பழம் மற்றும் காய்கறி விற்பனையாளர்கள், சலூன், அழகு மையங்கள், வாகன ஓட்டிகள், நடைபாதை வியாபாரிகள், கைவினைக் கலைஞர்கள் ஆகியோர் பயன் பெறலாம். மகளிர் தொழில் முனைவோரும் இத்திட்டம் மூலம் கடன் பெறலாம் என்பது கவனிக்கத்தக்கது.